செ.வெ.எண்: 26 நாள்: 09.03.2017

**புதுக்கோட்டையில் தேசிய மாதிரி ஆய்வு 74வது சுற்று மதுரை மண்டல அளவிலான புத்தூட்ட பயிற்சி வகுப்பு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச்செயலர்/ஆணையர், முனைவர்.வெ.இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் சார்பில் தேசிய மாதிரி ஆய்வு 74வது சுற்று மதுரை மண்டல அளவிலான புத்தூட்ட பயிற்சி வகுப்பு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச்செயலர்/ஆணையர், முனைவர்.வெ.இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.03.2017) நடைபெற்றது.

இந்த புத்தூட்ட பயிற்சி வகுப்பினை பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மை செயலர்/ஆணையர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் மூலம் தகவல் தொழில்நுட்ப சாதனங்களை கொண்டு துரிதமாக தகவல்களை சேகரித்து பொதுமக்களுக்கு பயன்படும் திட்டங்கள் குறித்து சரியான தகவல்களை சேகரித்து அதன் அறிக்கையினை தமிழகஅரசிற்கு சமர்ப்பித்து திட்டத்தை வெற்றியடைய செய்யும்படி புள்ளிவிபரங்களை சேகரிக்க வேண்டும். இதே போன்று வேளாண்மைத்துறை உற்பத்தி, மழையளவு, மக்களின் வாழ்க்கைத்தரம் போன்ற பல்வேறு தகவல்கள் குறித்து அதன் முன்னேற்ற அறிக்கையினை சரியாக கணக்கிட்டு புள்ளி விபரங்களை சேகரிக்க வேண்டும்.

மேலும் இப்பயிற்சி வகுப்பில் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்று வரும் திட்டங்களான வேளாண்மை கணக்கெடுப்பு, பிரதம மந்திரி பஜல் பீமா யோஜனா பயிர்க்காப்பீட்டுத்திட்ட அறுவடை பரிசோதனை நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தூய்மை பற்றிய ஆய்வு தேசிய மாதிரி ஆய்வு ஆகியவை குறித்து அலுவலர்களுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பயிற்சியை தொடர்ந்து 10.03.2017 அன்று கணினி பயிற்சியும் வழங்கப்படவுள்ளது. எனவே அலுவலர்கள் இப்பயிற்சி வகுப்பினை முறையாக கற்று சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்றும் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை முதன்மைச்செயலர்/ஆணையர், முனைவர்.வெ.இறையன்பு,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இப்பயிற்சி வகுப்பில் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை கூடுதல் இயக்குநர் திரு.சார்லஸ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, வேளாண் இணை இயக்குநர் திரு.சோ.அண்ணாமலை, துணை இயக்குநர் திரு.பழனிச்சாமி (பொ.(ம) பு.து.) உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**